Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

# CC.No. 346 /2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் 31**-ம்** தேதி **வெள்ளிக்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 8-வது** நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | உதவி மருத்துவ அலுவலர் |
| பெயர் | - | மருத்துவர் இம்தியாஸ் அகமது | வட்டம் | - | திருக்கோயிலூர் |
| த/பெ | - | ஷர்புதின் | சமயம் | - | - |
| கிராமம் | - | டி.குன்னத்தூர் | வயது | - | 45 |
| சாதி | - | - | | | |

நாள் ( Dated) : 31.07.2026

| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
|---|---|
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல். எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-1 |
| | எதிரிகளுக்காக திரு. விஜய.பிரிதிவிராஜன், வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | அரசு ஆரம்ப சுகாதார நிலையம்<br>டி. குன்னத்தூர், , திருக்கோவிலூர் வட்டம் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | மருத்துவர் இம்தியாஸ் அகமது<br>அரசு ஆரம்ப சுகாதார நிலையம்<br>டி. குன்னத்தூர், , திருக்கோவிலூர் வட்டம் |
| சாட்சி ( Witness) | அசா.8 |

சாட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் டி. குன்னத்தூர், திருக்கோவிலூர் வட்டத்திலிருந்து நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையம் டி. குன்னத்தூரில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.12.2020 அன்று நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது மாலை 7.45 மணியளவில் கம்சலா, வயது 52, க/பெ. ஏழுமலை, வீரபாண்டி கிராமம் என்பவர் சிகிச்சைக்காக அவருடைய மகள் காமாட்சி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவரை அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு திடீர்குப்பம் கிராமத்தில் கல், கத்தியால், தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலை வலது புறப்பகுதியில் 4 செமீ அளவு தையல் போட்ட காயம் காணப்பட்டது.

2. உடல் முழுவதும் வலிஇருந்ததாக கூறினார். அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை மற்றும் கருத்துரை அ.சா.ஆ.4 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 28.12.2020 அன்று மாலை 6 மணிக்கு தாக்கப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது. ஆனால் 7.45 மணிக்குதான் சிகிச்சைக்காக வந்துள்ளார். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.தற்செயலாக கீழே விழுந்து கடினமான பரப்பிலோ அல்லது கரடுமுரடான பகுதியில் விழும்போதுஇது மாறி காயம் ஏற்படவாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

2. என்னிடம் சிகிச்சைக்காக சேரும் போது தெரிந்த நான்கு நபர்கள் அவரை தாக்கியதாக பொதுப்படையாக கூறினார் அவரின் விவரங்கள் ஆண்களா , பெண்களா மற்றும் அவர்களின் பெயர்கள் கூறவில்லை என்றால் சரிதான். நாங்கள் பொதுவாக எத்தனை நபர்கள் தாக்கினார்கள், தெரிந்தநபர்களா தெரியாதவர்களா என்பதை மட்டும் குறிப்பிடுவோம்.

3. உடல் வலி என்பது கற்பனையாகவோ, பாவனையாகவோ இருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் திடீர்குப்பம் என

சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தடியால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் தேதி நியாபகம் இல்லை.

4. காயம் எந்த வகையான ஆயுதத்தால் தாக்கப்பட்டது என்று போலீசார் என்னிடம் ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால் நியாபகம் இல்லை. எங்கையோ அவர் தன்னிச்சையாக ஏற்படுத்திக்கொண்ட காயத்தை மறைத்து என்னிடம் தவறான தகவலை கூறி பொய்யாக சிகிச்சை எடுத்துக்கொண்டனர் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** - இல்லை

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.07.31 16:32:54 +0530

**D.M-cum-JM,**

**T.V.Nallur.**